# சுட்டி

57


- இந்திராவுக்கு கோவில்
- பாலகுமாரன் பேட்டி
- சுந்தர ராமசாமி பதில்
- [illegible] கண்ணீர் மருத்துவம்



மாத இதழ் 60 பைசா நவம்பர் '85

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE  E- BOOKS , www.thamizham.net.,




FREE E- BOOKS , www.thamizham.net.,

## அடிமை முகாம்களில் சில காட்சிகள்!



வட இந்தியாவிலுள்ள தெஹாரி கார்வால் என்னுமிடத்தில் அமைந்திருக்கும் கொத்தடிமை முகாம்களில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. சுற்றிலும் கம்பி வேலிகள் அமைக்கப்பட்ட முகாம்களில் தொழிலாளர்கள் அடிமைகளாக வைக்கப்பட்டுள்ளனர். சிலர் இந்த முகாம்களில் பட்டினியால் மாண்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### சுட்டி சந்தா

சுட்டி சந்தா 12 இதழ்கள் அஞ்சலில் பெற ரூ 7.00 பணவிடை செய்யுங்கள்

### சுட்டி முகவரி

எல்லாத் தொடர்புகளுக்கும் சுட்டி
1494, அண்ணாநகர், சென்னை 600 040

### முன் இதழ்கள்

சுட்டி முன் இதழ்கள் எண் 1 முதல் 17, 19, 21 to 24, 26, 30 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். 50வது இதழ் 0.75 காசு. மற்ற இதழுக்கு 45 காசு வீதம் அஞ்சல் தலை/பணவிடை அனுப்பினால் அஞ்சலில் உங்களுக்கு வந்து சேரும்.

### சுட்டி இலவசம்

சுட்டி இலவசம்: சுட்டியைக் கேள்விப்படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரிகளை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்பலாம்.

### சுட்டி வரவில்லை

சுட்டி ஒழுங்காக வந்து சேரவில்லை என்று சில சந்தாதாரர்கள் மௌனமாகக் குறைபட்டுப் பயனில்லை. என்ன முயற்சி எடுத்தும் சில சுட்டி இதழ்கள் அஞ்சலில் திருடப்படுவது தவிர்க்க முடியாதிருக்கிறது. சந்தா முடிய காலமிருந்தும் 15 ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெற சந்தாதாரர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒரு முறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# நண்பர்களே!

## அவசரக் கடிதம்

வணிக இதழுலகின் பேய்த்தனமான வாடைக் காற்றால், துளிர் விடும் முற்போக்கு இதழ்களெல்லாம் அற்ப ஆயுளில் மறைவதே காலத்தின் கோலமாக இருக்கும் போது, எத்தனை எத்தனை பாடுபட்டு 60வது இதழை நெருங்கி வரும் சுட்டி, தன்னை வீழ்த்த வரும் இன்னல் களிலிருந்து தன்னை நிலை நிறுத்தவேண்டியிருக்கிறது!

சுட்டியை நேசிக்கும் உயிருக்குயிரான வாசகர்களே சுட்டியின் ஒரே பலம்; ஒரே வசதி; ஒரே விளம்பர சாதனம்.

எல்லாப் பக்கங்களிலிருந்தும் சூழ்ந்து வரும் தாக்குதல்களால் சுட்டிக்குச் சோதனைகள் பல வழியில் வலுத்தாலும், அதன் ஒரு பகுதியையேனும் சமாளிக்க இந்நேரத்தில் சுட்டி அன்பர்கள் தோள் கொடுக்க முடியும்.

சுட்டியை வலுப்படுத்த, இயன்றவர்கள் ஒவ்வொருவரும் ஆயுள் சந்தா ரூ 150/- வழங்குவதும், இயலாதவர்கள் குறைந்தது 10 நண்பர்களைச் சுட்டிக்கு சந்தாதாரர்களாக்குவதும், (சந்தா ரூ 7-00) சுட்டியின் தற்போதைய சோதனைகளை வெற்றி கொள்ள பெருந்துணையாக இருக்கும்.

முகவராய் இருக்கும் வாசகர்களும் உடனடியாகப் பாக்கிப் பணத்தை அனுப்பி உதவுங்கள். தாமதம் சுட்டியைக் கொல்லும். சோதனையில் உதவுவதுதான் உண்மையான நட்பு என்பதைச் செயல் படுத்த உடனடியாக இவ் வேண்டுகோளை நிறைவேற்றுவீர்களா?

அன்புடன்,
ஆசிரியர் குழு.

FREE E- BOOKS , www.thamizham.net.,

□ ஆநந்த! எனது பிறப்புரிமை"யைப் போல் தமிழ்ப் பிறப்புரிமையில் தலையிட்டு, துணிச்சலாக உரிமைக்குரல் எழுப்ப ஒரு தமிழனுமே உருப்படியாக இல்லை என்பதை எண்ணும்போது மனம் எ·ட்டி பாய்ந்த வேதனையில் துடித்தது. – லேனாதாசன், முருங்கப்பேட்டை.

□ அக். 85 அட்டைப்படம் அருமையிலும் அருமை. உம்மைத்தவிர வேறு எவராலும் இப்படி இரண்டு கழகங்களின் தெருக்கூத்து விபரத்தைப்

# வாசகர் எதிரொலி

போட்டு உடைக்க முடியாது. சுட்டி சுட்டிதான். – செம்பருத்தி, காஞ்சிபுரம்

□ "நமது சிரிப்பு மருத்துவம்" பகுதியைப் படித்த பிறகு, ஷேக்கின் கார்ட்டூனை நினைத்து நினைத்து அடிக்கடி சிரித்துக் கொண்டேன்

- சீர்காழி, காழி.க. இளங்கோ

□ "தேசியத்தையே விற்கிறார்களே!" என்ற கட்டுரையை முற்றிலுமாக ஆதரிக்க முடியாது. பூமிக்கடியிலுள்ள அக்னிக் குழம்புகளுடன் தனது தொடர்புகளால் குன்றுகள் லேசில் குறைந்து போகாது வளர்ந்து கொண்டுதானிருக்கிறது. மலை உடைப்பதை நம்பியிருக்கும் லட்சக் கணக்கான தொழிலாளர்களை என்ன செய்வதாக உத்தேசம்?

– இரா. ஜவேலுச்சாமி, கருத்தனேந்தல்.

□ உயர் அதிகார வர்க்கங்களின் நிலைமைகளை, வேலைகளைப் படமாக்கிக் காட்டியுள்ளீர்கள் தேசத்தை விற்கும் கூட்டம் நம்முள் இருப்பதை நாம அறிய வேண்டாமா? வெள்ளை ரோஜாவின் விதவை கீதங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். "அண்ணா என்கிற மனிதர்" என்ற அறிவைத் தொடும் கட்டுரை, படித்து மனதில் பதிய வைக்க வேண்டியதாகும். – ஊ. பரமசிவன், தேவிகுளம், கேரளா.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# இந்திரா காந்திக்கு கோயில், பூசை...

வாழ்ந்தபோது சாமியார்களை ஆதரித்த இந்திராவை, மறைந்த பின்பு சாமியார்கள் விடுவதாக இல்லை. ராமலிங்க சித்தாந்தி என்ற சாமியார், ஆந்திரத்து ராஜமுந்திரியில் இந்திராவுக்கு நினைவாலயக் கோயில் ஒன்றை ஆடம்பரமாக நிர்மாணிக்கிறார். செலவு ரூ6 லட்சத்தைக் கடந்து செல்கிறது.



காங்கிரஸ் தலைவர் நரசிம்ம ராவ், குடியரசுத் தலைவர் ஜெயில்சிங் இவர்களின் நல்லாதரவு பெற்றே இந்தச் சாமியார் இக்கோயில் திருப்பணியில் இறங்கியுள்ளார். ராஜமுந்திரி பேரூராட்சியே நெடுஞ்சாலை சந்திப்பில் 3 செண்ட் நிலத்தை இதற்காக வழங்கிவிட்டது. ராஜமுந்திரி பகுத்தறிவாளர்கள் கூட இந்திரா ஆலயத்திற்கு ஆட்சேபிக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் தென்னாட்டின் ராஜ்மோகன் ராய் எனப்படும் வீரேசலிங்கம் பந்துலுவின் 'ஹிட்டாகரணி சமாஜம்' என்ற பகுத்தறிவு இயக்கத்தின் தலைவர் மெதுரி சத்யநாராயணாவே ஆலயக் குழுவின் துணைத்தலைவராக ஆக்கப்பட்டுள்ளார்.

இந்திராவின் வெண்கலச்சிலை ஒரு பூலோக உருண்டையின் மேல் நிறுத்தப்படும். அந்த உருண்டையை 4 சீறும் சிங்கங்கள் தாங்கி நிற்கும். மார்டின் லூதர் கிங், அபிரகாம் லிங்கன், காந்தியடிகள், ஜான்சி ராணி படங்கள் 4 சுவர்களிலும் (துணை தெய்வங்கள் போல!) காட்சியளிக்கும்.

தினமும் இக்கோவிலில் இந்திராவுக்கு பூஜை நடத்தப்பட்டு 50 ஏழைகளுக்கு அன்னதானம் செய்வார்களாம். இந்திரா சிலையருகே

FREE E- BOOKS , www.thamizham.net.,



அணையா விளக்கு பிரகாசிக்க எரிவாயுவுக்கு "ஸ்பெஷல் பர்மிட்" கிடைக்க ஏற்பாடு நடக்கிறது.

அரசியல் வாதிகள், முக்கிய பிரமுகர்களின், அரவணைப்பில் இருக்கும் இச்சாமியாரின் பின்னணி என்ன? 40 வருடங்களுக்கு முன்பு கடப்பா மாவட்டத்திலிருந்து இவர் ராஜமுந்திரிக்கு ஏன் வந்தார் என்று யாருக்கும் தெரியாது. மந்திர, தந்திர வேலைகளால் முக்கியமானவர்களை வளைத்துப்போடும் இவருக்கு குடியரசுத் தலைவர் ஜெயில்சிங் ஒரு சிறப்பு சீடராம்.

வேடத்திலே சாமியாராக இருந்தாலும் இவருக்கு உயிருடன் நான்கு மனைவிகள் உண்டு. இரண்டு கார்களும் உண்டு. அவர் புகைப்பதோ வெளிநாட்டு சிகரெட்; அருந்துவது அயல்நாட்டு மது மட்டுமே.

காங்கிரஸ் தலைமை இப்படியொரு ஆசாமியை இந்திராவுக்கு கோயில் கட்ட அனுமதித்ததன் மர்மம் விளங்கவில்லை. அ.தி.மு.க. கொ.ப.செ. ஜெயலலிதா இக்கோவிலுக்கு அடிக்கல் நாட்டியவர்; இந்தச் சாமியாருக்கு வேண்டியவர்.

[ ஆதாரம் : தி வீக் ] - ஸ்டெனிஸ்லாஸ்.

யமாக நடத்தப்படுகிறது. "ஷோ கேஸ்" பொம்மை போல மலிவு இட்லி, தோசை, காபி கேட்கும் பொழுது காட்டப்படும்.

மலிவு விலையில் இட்லி, தோசை காபி கிடைக்க எங்கள் அரசு வழி செய்திருக்கிறது என்று அமைச்சர் மேடையில் பீற்றிக் கொள்ளலாம்.

— அந்தோனி

FREE E- BOOKS , www.thamizham.net.,

# மலிவு விலையில் இட்லி, தோசை

உணவு அமைச்சர் வற்புறுத்திவிட்டாராம். அரசு நிர்ணயிக்கும் விலையில், அளவில் இட்லி, தோசை, காப்பி விற்கா விடில் நடவடிக்கையாம். ஆளுநர் மாளிகை அருகிலேயே இருக்கும் ஒரு பவனுக்குள் நுழைந்தபோது அமைச்சர் ஆணையில் வற்புறுத்தல் தெரிந்தது. மிக மோசமான கையெழுத்தில் வேண்டா வெறுப்புடன் ஓர் அட்டையில் இப்படி எழுதியிருக்கிறார்கள்: விலை குறைவான இட்லி (2) = 60 காசு, தோசை = 70 காசு, காபி = 50 காசு.

இதைக் கண்டு கொள்ளாமல் பெயிண்ட் அடித்த நிரந்தர விலைப் பட்டியலில் இட்லி (2) = ரூ 1.00, தோசை = ரூ 1.40, காபி = ரூ 0.70 என்ற வழக்கமான விலை தொடர்கிறது.

விலை குறைவான இட்லியைப் பார்த்தால் ரூ 1.00 இட்லியை விட வாட்ட சாட்டமாகவே இருக்கிறது. ஆனால் வாயில் வைக்க முடியவில்லை. எப்படித்தான் இவ்வளவு மோசமான சுவையுடன் தயாரிக்க முடிகிறதோ! என்று வியப்பாக இருக்கிறது. விஷயம் தெரிந்தவர்கள் இதை சட்டை செய்வதில்லை. விஷயம் தெரியாதவர்களுக்கு சர்வரே விஷயத்தை எடுத்துச் சொல்லி விடுகிறார். எந்த ஏழையும் இந்த கஷ்டத்தைக் காசு கொடுத்து சாப்பிட மாட்டார். பின் ஏன் இந்த பம்மாத்து வேலை?

அரசுக்கு தெரியாதா? அதிகாரிகளுக்கு இந்த ரெட்டை வேஷம் புரியாதா? "ஐயா' அதிகாரிகள்தானே ஓட்டல்காரர்களுக்கு இந்த வழிகளையே சொல்லித்தருகிறார்கள்" என்கிறார் சாப்பிட வந்த ஒருவர். 'நான் அடிக்கிறாப் போல் அடிப்பேன் - நீ அழுறாப் போல் அழு' என்ற விளையாட்டு இரண்டு பேருக்கும் சௌகர்

← ←

FREE E- BOOKS , www.thamizham.net.,



# அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றாமல் சமூக மாறுதல் சாத்தியமா?

சுந்தர ராமசாமி பேசுகிறார்

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றாமல் அடிப்படையான சமூக மாற்றங்களை உருவாக்க முடியாது. எனினும் இன்றைய அமைப்பு அளிக்கும் உரிமைகள், சட்டம், சுதந்திரம் ஆகியவற்றைப் பயன்படுத்தி சில முக்கியமான சீர்திருத்தங்களைச் செய்ய இயலும். இந்தியக் கல்வியை உருவாக்கி கட்டாயக் கல்வியை அமுல் படுத்த முடியும். சுற்றுப்புறச் சுகாதாரத்தை வற்புறுத்த முடியும். தனிநபர் சுத்தங்களைப் போதிக்க முடியும். இயற்கைச் செல்வங்களைக் காப்பாற்ற முடியும். லஞ்ச ஊழல்களை கணிசமாக ஒழிக்க முடியும். தேசபக்தியை ஊட்ட முடியும். அதிகார வர்க்கத்தை மக்களுக்கு ஊழியம் செய்யும் பணியாளராக மாற்ற முடியும். மேலான சினிமா, மேலான இலக்கியம், நாட்டுப்புறக் கலைகள் ஆகியவற்றை முன்னிலைப் படுத்தி, கலாச்சார மேன்மைகளை உறுதிப்படுத்த முடியும். பெண்மைக்குரிய கௌரவங்களையும் உரிமைகளையும் அளிக்க முடியும்.

இந்திய விவசாயி அரசாங்கத்தின் பிச்சையையோ

FREE E- BOOKS , www.thamizham.net.,

கருணையையோ எதிர்பார்க்காமல், தங்களுக்குச் சொந்தமான நிலத்தில் பாடுபட்டு பயிரேற்றி, தங்கள் வாழ்க்கையைத் தாங்களே தீர்மானிக்கும் சுயேச்சையான குடும்பங்களாக உருவாக வேண்டும். இதற்கு அடிப்படையான பொருளாதாரப் புரட்சியை அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றித்தான் நிறைவேற்ற முடியும். இன்று இந்திய விவசாயியை - நில உடைமையாளர்கள், அரசியல்வாதிகள், வியாபாரிகள், தொழிற்சங்கவாதிகள், அதிக ஊதியம் பெறும் ஆலைத் தொழிலாளர்கள், அலுவலக ஊழியர்கள் - அனைவரும் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயியை விவசாயிகள் அல்லாதோர் சுரண்டுவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்புத்தான் இன்றையது. மிகப் பெரும்பான்மையான இந்திய விவசாயிகளின் அன்றாட வருமானத்தையும், மிகச் சிறுபான்மையான விவசாயிகள் அல்லாதோரின் அன்றாட வருமானத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்த உண்மை பளிச்சென்று தெரியும்.

## 'அதிசுவேதமிகதே' பருகுங்கள்



இப்படி ஒரு பண்டத்தை நீங்கள் கடையில் வாங்க முடியாது. காப்பி, தேனீர் பானங்களுக்குப் பதிலாகவும் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பானம் இது. காப்பி, தேயிலை போன்ற பொருள்களில் காபின் (CAFFEINE) என்னும் உணர்வைத் தூண்டும் விஷமருந்து இருப்பதும், அது உடலுக்குத் தீங்கு விளைக்கின்றது என்பதும் முடிவாகிவிட்டபடியால், அத்தகைய பானங்க

FREE E- BOOKS , www.thamizham.net.,

ளைத் தவிர்ப்பது நல்லது.

மேற்கண்ட புதிய பெயரின் ஒவ்வோர் எழுத்தும், ஒரு நாட்டு மருந்தின் முதலெழுத்தாகும்.

அ - அதிமதுரம்; தி - திப்பிலி; சு - சுக்கு; வே - வேப்பம்பூ;

த - தனியா; மி - மிளகு; க - கண்டத்திப்பிலி; தே - தேன்.

மேற்கண்ட பொருள்கள் யாவும் சுலபமாகக் கிடைக்கக் கூடியவையே. இந்த மருந்துச் சாமான்களை ஒரு குறிப்பிட்ட அளவில் கலக்க வேண்டும் என்பது கட்டாயம் அல்ல. ஒரு பொருள் கூடவும் ஒரு பொருள் குறைவாகவும் இருக்கலாம். அதனால் தீங்கு ஒன்றும் இல்லை. தேனைத் தவிர மற்ற பொருள்களை எல்லாம் லேசாக வறுத்துப் பொடி செய்து டப்பியில் பத்திரப்படுத்தி வையுங்கள். தேவையான போது அடுப்பில் தேநீருக்குத் தண்ணீர் வைப்பது போல தண்ணீரைக் கொதிக்க வைத்து இப்பொடியைக் கொஞ்சம் கையளவாகப் போட்டுக் கீழே இறக்கித் தெளிய வைக்கவும். இனிப்புக்குச் சர்க்கரை போடவும். பால் சேர்த்தும், சேர்க்காமலும் சாப்பிடலாம். கொஞ்சம் ஆறின பிறகு சிறிது தேனை ஊற்றுங்கள். இப்போது "அதிசுவேதமிகதே" பானம் தயார்.

அதிகம் தேநீர் அடிக்கடி குடிப்பவர்கள் நாளடைவில் நல்ல பசியை இழக்கிறார்கள். பித்தமும் அதிகமாகிறது என்று சொல்லப்படுகிறது. ஆனால் நம் புதிய பானத்தினால் நல்ல பசியும், உற்சாக உணர்வும், சுறுசுறுப்பும், தெம்பும் உண்டாவதை ஒருசில நாட்கள் அதிசுவேதமிகதே பருகுவதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

— சுட்டி பாரதி.

FREE E- BOOKS , www.thamizham.net.,

புத்தகப் பிரிவு

# மக்கள் சீனத்தில் மலர்ந்த எண்ணங்கள்

வகை: பயண நூல்; ஆசிரியர்: டாக்டர் மு. நாகநாதன்; வெளியீடு: பெர்ல் வெளியீடு, 136, அண்ணா சாலை, சென்னை - 600002; பக்கங்கள் - 156; விலை: ரூ10.00.

இடப்பரப்பு, மக்கள் தொகை, பல்வேறு இனப்பிரிவுகளில் மக்கள் சீனம் இந்தியாவைப் போன்றது. இன்று அந்நாடு வல்லரசாகத் திட்டமிட்டு முன்னேறியுள்ளதை இப்பயண நூல் தெளிவாக்குகிறது.




அரசு அலுவலரிடையே கையூட்டு, வரி ஏய்ப்பு, அரசு பொருட்களைத் திருடுதல், அரசு ஒப்பந்தங்களை ஏமாற்றுதல், தனியார் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தவும், உலக வாணிபத்திற்காகவும் அரசின் பொருளாதார இரகசியத்தைத் திருடி வெளியிடுதல் - இவை நம் நாட்டில் கெட்டிக்காரத்தனமாகப் புகழப்பட்டு வளர்க்கப்பட்டு வரும் ஐவகைத் தீமைகள். இவை பொது மக்கள் மேடையில் கடுமையாக விமர்சிக்கப்பட்டு விலக்கப்படுவதற்கும், மக்களிடையே அரசியல் விழிப்புணர்ச்சி மமலோங்கவும் திட்டமிட்ட பிரச்சாரங்கள் செய்யப்படுவது மக்கள் சீனத்தின் மகத்தான வெற்றிக்குக் காரணமென ஆசிரியர் விளக்கியுள்ளார். கம்யூன்கள் எனும் 'சிறு தன்னிறைவு அமைப்புகள்' மக்கள் சீனத்தின் உயர்வுக்கு வழிவகுத்துள்ளது.

இவ்வாறாக நம் நாட்டின் உயர்வுக்கு உதவும் "மக்கள் சீனத்தின் வளர்ச்சிக்கு உதவிய" பலவித செயல்திட்டங்களை ஆசிரியர் நூல் முழுவதும் பகிர்ந்து கொண்டுள்ளார். — 'வெங்கட் - மோகன்'

FREE E- BOOKS , www.thamizham.net.,



# சுஜாதா

விவாதங்கள்

விமர்சனங்கள்

மேற்கண்ட தலைப்பில் வெளிவந்திருக்கிறது ஒரு நூல். இது மசாலா பத்திரிகையின் பல்வகை உத்திகளுக்கும் ஈடுகொடுத்து எழுதிவரும் எழுத்தாளர் சுஜாதாவின் இன்னொரு பக்கத்தைக் காட்டுகிறது. அவரது சில விவாதங்கள், விமர்சனங்கள் :-

● சமூகம், அரசியல், இலக்கியம், கலை, பொருளாதாரம் போன்ற விஷயங்களில் என்னிடம் கைவசம் திட்டவட்டமான கருத்துக்கள் இல்லை. (இதிலெல்லாம் பிடிவாதமாக இருந்தால் என்னால் எழுத முடியாது என்று நினைக்கிறேன்.)

● பிரபல பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கு ஓரளவுக்கு மேல் புரிந்து கொள்ள முடியாது. அப்படியே புரிந்து கொண்டாலும் புதிய விஷயங்களை ஜீரணித்துக் கொண்டு அச்சுக்குக் கொண்டு வருவது அபூர்வம்.

● தொடர்கதைகள் இத்தனை வாரத்திற்குள் முடியும் வகையில் எழுதப்பட வேண்டும் என்றும் பத்திரிகை ஆசிரியரின் கட்டளைக்கு எவ்வளவு தான் பிரபலமான எழுத்தாளராயினும் கட்டுப்பட்டே ஆக வேண்டும். இதனாலும் கூட பல நல்ல படைப்புகள் எதுவுமே இல்லாத வெற்று ஜடங்களாயிருக்கின்றன.

● சிறிய பத்திரிகைகள் நல்ல விஷயங்களுடன் வெளியாகின்றன. ஆயின் பலரை எட்டுவதே இல்லை.

● வண்ண நிலவன், சுந்தர ராமசாமி, அசோகமித்திரன் போன்றவர்களை ரசிக்க முடிவதற்கு அவர்கள் எழுத்தில் இருக்கும் "சின்சியாரிட்டி"யினால் என்று கூடச் சொல்லலாம். >

FREE E- BOOKS , www.thamizham.net.,



எந்தப் பெரிய உருவத்தையும், அதன் பொலிவு கெடாமல் சிறுதாக்க முடியும் என்பதற்கு ஓர் உயிரியல் சான்று இது. கலப்பின உற்பத்தியாக ஜெர்மனியில் உருவாக்கபபட்ட இந்த "மினி பன்றி"யின் வளர்ச்சி இவ்வளவு தான். மிஞ்சிப் போனால் இந்த அழகிய பன்றி பூனையை விடப் பெரிதாக வளராது.

• இந்தியா போன்ற பெரிய பல பிரச்சனைகள் நிறைந்த ஏழை தேசத்திற்கு "ரைட்டிஸ்ட்" அரசாங்கம் பொருந்தி வராது. இடதுசாரி போக்கும் உறுதியும் வாய்ந்த அரசாங்கத்தை முடிவில் அது பெற்றே ஆக வேண்டும். இது தவிர்க்க முடியாத ஒன்று.

• மாதநாவல்கள் பஸ்களிலும் ரயில்களிலும் அவசரக் கோலமாகப் படிக்கப் படுபவை. அவற்றில் யாரும் இலக்கியத்தை எதிர்பார்ப்பதில்லை. அங்கு இலக்கியம் எழுதினாலும் எடுபடாது.

• தமிழில் திறனாய்வு சரியான முறையில் வளர்ச்சியடையவில்லை. இதுவரை வெளிவந்துள்ள திறனாய்வு நூல்கள் எழுதியவர்களின் சொந்த விருப்பு வெறுப்புகளை மோசமானதோர் நடையில் தொகுத்துச் சொல்பவையாக அமைந்துள்ளன.

• கம்பியூட்டர் என்ஜினியர் என்று சொல்லிக் கொள்வதில் உள்ள நிறைவு எழுத்தாளர் என்று சொல்லிக் கொள்வதில் தோன்றுவதில்லை.

[நூல் வெளியீடு: காவ்யா, 8 சாஸ்திரி நகர், II குறுக்கு தெரு, பெங்களூர் - 38. விலை: ரூ 20]

FREE E-BOOKS , www.thamizham.net ,

# ஜீவன்டோன்

22- ஆண்டுகளாக மக்களுக்கு நலமளிக்கிறது.

## உடல் வலிமையும் கட்டான உடலும் பெற

ஆண், பெண் எல்லா வயதினரும் சாப்பிடலாம்.

**எந்த விதமான பத்தியமும் இல்லை**

பலவீனமானவர்களுக்கும், உடல் மெலிந்தவர்களுக்கும் நல்ல உடல் வலிமை பெற, கட்டான உடலை பெற, நோய் எதிர்ப்பு சக்தி அதிகரித்து சிறந்த ஆரோக்கியத்தை அடைய ஜீவன்டோன் அசைவ சேர்க்கை கிடையாது. முழுக்க முழுக்க தாவரக் கொழுப்பு மட்டுமே சேர்க்கப்பட்டது.

ஆண்களுக்கு சிறப்பாக: உடல் வலிமையும், கட்டான உடலும், நாள் முழுதும் களைக்காமல் வேலை செய்யும் தெம்பு ஏற்பட.

பெண்களுக்கு சிறப்பாக: உடல் தளர்ச்சி அசதியைப் போக்கி இரத்த விருத்தி அடைந்து நல்ல ஆரோக்கியமும், உற்சாகமும் பெற. குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். மெலிந்த குழந்தைகள் நல்ல புஷ்டியாக, பசி எடுத்து குழந்தைகள் நன்றாக சாப்பிட, படிப்பில் நல்ல ஞாபக சக்தியும், சுறுசுறுப்பும், உடல் வலிமையும் உண்டாக, அடிக்கடி நோய் வாய்ப்படாமல் நல்ல வளர்ச்சியடைய.

போதுமான உடல் கட்டும், வலிமையும் ஆன பிறகு சாப்பிடுவதை நிறுத்திக் கொள்ளவும்.

**இந்தியாவில் தற்போது எல்லா மருந்து கடைகளிலும் கிடைக்கும்.**




தமிழ்நாடு முழுவதும் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.
தமிழ்நாடு பூரண விநியோகஸ்தரை தொடர்பு கொள்ளவும்.

TRADE MARK

JEEVANTONE PRODUCTS
P.B. 380
17/2 Cambridge Road
Bangalore 560 008

தமிழ்நாடு பூரண விநியோகஸ்தர்கள்
**ஜீவன் எண்டர்பிரைசஸ்,**
1494, 13வது மெயின் ரோடு அண்ணாநகர், சென்னை 600 040

FREE E- BOOKS , www.thamizham.net.,

# நமது கண்ணீர் மருத்துவம்



* கண்ணீர் இயற்கை வழங்கும் மா மருந்து. தினமும் கண்களில் ஒரு பாலாடை அளவு கண்ணீர் உற்பத்தியாகிறது — காரணத்துடன் தான்!
* **கண்ணைக் காக்கும் கவசம் கண்ணீர்.**


எப்படி? நோய்க்கிருமிகள் கண்களுக்குள் நுழையாமல், எதிர்த்து நின்று அவற்றை அழித்துக் கண்களைக் கழுவுகிறது கண்ணீர்.

* கண்ணீரில் இரண்டு வகை கிருமி நாசினி சக்தியுள்ள பொருட்கள் உள்ளன. அவை: லைசோசைம், பையோடின்
* சுமார் ஒரு தேக்கரண்டி கண்ணீரை, 1 லிட்டர் தண்ணீரில் கலந்தால் அது மிகச் சிறந்த மூட்டைப் பூச்சி மருந்தாகப் பயன்படும். மூட்டைப் பூச்சியால் தொல்லைப்படுபவர்கள் கண்ணீர் கலந்த தண்ணீரை மூட்டைப் பூச்சி புகுந்துள்ள இடங்களிலும் தெளிக்கவும்.
* கடையில் விற்கும் கிருமிநாசினிகள் குறிப்பிட்ட காலத்திற்குப் பின் வலுவிழந்து விடும். கண்ணீரின் நோய் எதிர்ப்பு கண் உள்ளவரை குறைவதில்லை.
* அல்சரையும், கட்டிகளையும் குணப்படும் ஆற்றல் கண்ணீருக்கு உண்டு.
* மனம் வருந்தி அழுது கண்ணீர் விட வேண்டாம். வாய்விட்டு நன்கு சிரித்தாலும் கண்ணீர் வரும். கண்கள் சுத்தமாகிப் பிரகாசிக்கும். சிரித்துக் கண்ணீர் விட்டு கண் நோய்களை, மன நோய்களை விரட்டுங்கள்.
* அழுகை வரும்போது அடக்காதீர்கள். நன்கு அழுதுவிடுங்கள். அடக்கினால் மன நோய் வரும். நரம்புக்கோளாறு உள்ளவர்கள் அழ முடியாதவர்கள். வயிற்றுத்தொல்லை, ஆஸ்துமா, அல்சர் இவை கண்ணீர் வறட்சி காரணமாக ஏற்படக்கூடும்.

— சித்தன்.

[அடுத்து நமது பட்டினி மருத்துவம்]

FREE E- BOOKS , www.thamizham.net.,




ஒரு தொலைபேசித்துறை எப்படி இயங்கக் கூடாது என்பதற்கு உலகநாடுகளுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவது இந்திய தொலைபேசித்துறை இப்படிக்கூட தவறு நேருமா என்று அதிர்ச்சியடைய வைக்கும் இன்னொரு நிகழ்ச்சி: பம்பாயில் திரு. அலி என்பவருக்கு மே 7லிருந்து ஜூலை 20 வரையிலான காலக்கட்டத்திற்குத் தொலைபேசி கட்டணம் பில் வந்தது. தொலைபேசி வாடகை ரூ 200/- என்று மட்டும் போட்டிருந்தார்கள். அவர் உள்ளூர், வெளியூர் தொலைபேசிகள் செய்ததாகக் குறிப்பு இல்லை. அவர் அப்படி செய்திருக்கவும் முடியாது. காரணம் அவரிடம் தொலைபேசியே இல்லை. பாவம், அவர் செய்த ஒரே தவறு 1981 இல் தொலைபேசித் தொடர்பு கேட்டு விண்ணப்பித்தது தான்.

—"மிட் டே."


# ஆஸ்துமாதானே!

ஆஸ்துமா, ஈஸினோபீலியா, இருதய நோய்கள். பால்வினை நோய்கள், மூட்டுவலி, மாதவிடாய் கோளாறுகள் மற்றும் எவ்வகை பெரிய நோய்களும் மிக விரைவில் சுகமடைய மூலிகை சிகிச்சை பெற இலவச கடித ஆலோசனை பெறலாம்.

போன்: 469 TPT

முகவரி:

**ஞானோதய தெய்வீக மூலிகை வைத்தியர்**

டாக்டர். **சி. கே. மாணிக்கவாசகம்**

செலந்தம் பள்ளி போஸ்ட், திருப்பத்தூர் தாலுகா (வ. ஆ.), - 635653.

அறிவிப்பு: சென்னை, பெங்களூர், வேலூர், சேலம். திருச்சி, கோவை, மதுரை, திருப்பத்தூர் ஆகிய முகாம்களில் நேரிலும் ஆலோசனை பெறலாம்.

குறிப்பு: 1986-ஜனவரி முதல் ஈரோடு, பழனி, புதுக்கோட்டை, கரூர் ஆம்பூர், ஆரணி, காஞ்சிபுரம், பாண்டிச்சேரி, கடலூர் ஆகிய ஊர்களிலும் முகாம் உண்டு.


FREE E- BOOKS , www.thamizham.net.,

மதராஸ் மாநிலம் என்று இருந்ததை அண்ணாதான் தமிழ் நாடு என்று மாற்றினார். தமிழக அரசின் குறிக்கோள் சின்னத்தில் இருந்த 'சத்யமேவ ஜெயதே' என்ற வடமொழி வார்த்தைகளை நீக்கி வாய்மையே வெல்லும் என்று தமிழாக்கினார். 2-வது உலகத் தமிழ் மாநாட்டைச் சென்னையில் நடத்தி அதன் தொடர்பாக தமிழறிஞர்களின் சிலைகளைச் சென்னையில் நிறுவினார். அரசு பேருந்துகளில் வள்ளுவரும் வள்ளுவமும் இடம் பெறச் செய்தார்.

"தமிழாய்ந்த தலைமகனே தமிழ்நாட்டின் முதலமைச்சராய் வருதல் வேண்டும்" என்ற பாரதிதாசனின் கனவு அண்ணாவால் தான் நனவானது. எனவே எங்கும் தமிழ் எதிலும் தமிழ் ஒலித்தது என்று மகிழ்ந்தனர் தமிழன்பர்கள் பலர்.

அண்ணா ஆட்சியைப் பிடிக்குமுன் தமிழ் மொழி, இனம், நாடு மீது இலட்சக்கணக்கானோர்க்கு உணர்வு ஏற்படும் வண்ணம் பேசியும் எழுதியும் வந்தார். தமிழ்ப் பற்றாளர்கள் பலர் தோன்றவும், எழுச்சி கொள்ளவும் காரணமானார்.

அண்ணா என்கிற தமிழ்ப் பற்றாளரின் ஒரு புறம் இது. அவருக்கு இன்னொரு புறமும் உண்டு; அதுவும் பரிசீலிக்கப்படாக வேண்டும்.

அண்ணாவுக்கு தமிழ்ப்பற்று இருந்த அளவுக்கு ஆங்கில மோகமும் இருந்தது என்பதை மறுக்கமுடியவில்லையே. அவர் வளர்ந்த, வளர்த்த நீதிக்கட்சி ஆங்கில மோகிகளின் கட்சி. அதன் தலைவர்கள் தமிழை ஒரு காலத்தில்



## அண்ணா என்கிற தமிழ்ப் பற்றாளர்

FREE E- BOOKS , www.thamizham.net.,

அருவெறுப்போடு பார்த்தது மட்டுமின்றி தமிழில் பேசவும் வெட்கப்பட்டனர்.

திராவிட இயக்க முன்னோடிகளான டி.எம்.நாயர், பொப்பிலி, பனகல், தியாகராயர், ஈ.வெ.ரா. யாருமே தமிழர் அல்லர். திராவிடம், சுயமரியாதை ஆகிய சொற்களும் தமிழ்ச் சொற்கள் அல்ல.

இந்தச் சூழலில் அரசியலில் வளர்ந்த அண்ணாதுரையும் ஆங்கிலத்திற்குத் தனி இடம் கொடுத்தார். ஆங்கிலம் கற்றே பின்பு தமிழ்ப் புலமை எய்தினார் என்பதை "ஆங்கிலக் கடல் நீந்தித் தமிழ்க் கரையேறிய அறிஞர்களில் அன்பர் அண்ணாதுரையும் ஒருவர்" என்கிறார் அறிஞர் தி.ஆ.பெ. விசுவநாதம்.

அண்ணா மனதின் முதற் சிந்தனை கூடத் தாய்மொழித் தமிழில் இல்லாது ஆங்கிலத்தில் தான் இருந்தது. ஆங்கில சொற்றொடர் அமைப்பில் அவர் எழுதும் தமிழ் நடை கூட அதற்குச் சான்று. இதை உறுதிப்படுத்துவது போல அண்ணாவை வசனமெழுத வைத்து படமெடுத்தத் திரைப்பட இயக்குநர் பஞ்சு சொல்கிறார்:

"அண்ணா எதையுமே ஆங்கிலத்தில் தான் சிந்திப்பார், பின்னர்தான் அதைத் தமிழில் மொழி பெயர்த்துக் கொடுப்பார், அப்படிச் செய்வதுதான் அவருக்குச் சுலபமாக இருந்தது."
(ஆனந்த விகடன் 31-8-69 - பக்:53)

ஆங்கிலப் புலமை, ஆங்கில மோகம் இவற்றிலிருந்துப் பின்னால் கிளைத்தது தான் அவரது தமிழ்ப்பற்று. எனவே தான் அந்நிய மொழியான இந்தியை எதிர்த்தது போல, ஒருக்காலும் ஆங்கிலத்தை அப்புறப்படுத்த அவர் உடன்படவேயில்லை. இந்தி அந்நிய மொழி எனில் ஆங்கிலம் அதைவிட அந்நியமான மொழி என்று அண்ணா நினைக்கவில்லை.

FREE E- BOOKS , www.thamizham.net.,



டால்மியா என்ற வடநாட்டுக்காரர் பெயரில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலை இருந்தக் குடியிருப்புப் பகுதிக்கு 'டால்மியாபுரம்' என்று வடநாட்டுப் பெயர் வைத்ததை எதிர்த்து ஆவேசமான ரயில்நிறுத்தப் போராட்டம் செய்தார். இதே மாதிரி ஆங்கிலேயர்கள் பெயரால் ஹார்வி மில் உள்ள மதுரைப் பகுதி ஹார்வி நகர் என்று அழைக்கப்படுவதையோ, ஏன் தமிழக அரசின் தலைமைச் செயலகமே செயின்ட் ஜார்ஜ் கோட்டை என்று அழைக்கப்படுவதையோ சிறிதும் எதிர்க்கவில்லை.

தமிழ்நாட்டினர் மீது இந்தி கட்டாயப்படுத்தப்பட்டபோது தமிழைச் சாகடிக்கத்தான் இந்தி வருவதாக அண்ணா பிரச்சாரம் செய்தார். உண்மையில் ஆங்கிலத்தின் இடத்தைக் கைப்பற்றவே இந்தி நுழைந்தது. இந்தித் திணிப்பின் முதல் நோக்கம் ஆங்கில நீக்கமே தவிர, மாநில மொழி எதிர்ப்பு அல்ல என்பது அமைதியாக சிந்தித்தால் புலப்படும்.

தமிழ் உட்பட, மாநில மொழிகளைப் பயிற்று மொழியாக அறிமுகப்படுத்தியவர்கள் இந்தியைத் திணித்த காங்கிரசார் தான். அண்ணா ஆட்சி தமிழகத்தில் நிலவும் முன் பெரும்பாலான பள்ளிகளில் தமிழே பயிற்றுமொழியாக விளங்கியது. தமிழ்ப் பற்றுடைய அண்ணா ஆட்சி முதல் தான் தமிழ் பயிற்றுமொழியுடைய பள்ளிகளின் எண்ணிக்கை வேகமாக சரியத் தொடங்கி, அந்த இடத்தில் "ஆங்கி[illegible]டியம்" அமோகமாக வளரத் தொடங்கியது. 'கான்வெண்டுகள்' செழித்தன.

FREE E- BOOKS , www.thamizham.net.,

இந்தி எதிர்ப்பு உணர்ச்சியின் மீது கட்டப்பட்ட தமிழரசு என்று அண்ணா எழுதிவந்தாலும் உண்மையில் இந்தி எதிர்ப்பு ஆங்கிலத்தைத்தான் வளர்த்ததே தவிர தமிழை அல்ல.

தமிழ்மொழியின் செல்வாக்கை, தன்மானத்தை, கல்வி மொழித் தகுதியை, ஆட்சியை நெடிய பாதிப்புக்கு உள்ளாக்கியது ஆங்கிலமேயன்றி, இந்தி இல்லை. வெறும் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தப்பட்ட 'இந்தி எதிர்ப்பு' என்பது தமிழ் இன உணர்வைத் தூண்டிவிட்டாலும், மறைமுகமாக ஆங்கிலத்தை வளர்த்து தமிழை ஒதுக்கியது.

அண்ணா ஆட்சிக்குப் பின் இந்தி கட்டாயப் பாடமாக இல்லாதது போலத் தமிழும் கட்டாயப் பாடமாக இல்லை. ஆங்கிலம் மட்டுமே பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கட்டாயப்பாடம். தமிழே படிக்காமல் தமிழ் நாட்டில் ஒரு மாணவன் பாலர் பள்ளி முதல் கடைசிப் பட்டம் வரை முடிக்க முடியும். ஈராண்டு தமிழகத்தில் ஆட்சி நடத்திய தமிழ்ப்பற்றாளர் அண்ணா இதனை எப்படி அனுமதித்தார்?

எனவே எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பது அண்ணாவின் உதட்டின் ஒலியாக இருந்ததே தவிர உள்ளத்தின் ஒலியாக இல்லை. தமிழ் அவருக்குத் தாய் எனில், ஆங்கிலம் தேவதாய்.

தமிழர்களிடம் நூற்றாண்டுகளாகத் தொற்றியிருந்த அடிமை மோகத்தின் நவீன வெளிப்பாடுதான் ஆங்கில மோகம். இதைப் பிடுங்கி எறிவதில் தான் உண்மையான தமிழ் வளர்ச்சி அடங்கியிருக்கிறது. தமிழரின் உயிரணுக்களில் பற்றியிருக்கும் இந்த அந்நிய மோகத்தைக் களைவது மிகக் கடினம். இதில் கை வைத்தால் ஓட்டுகள் பறிபோகும்.

எனவே கட்சிக்கு விளம்பரம் கிடைக்கு[illegible]ளில் அண்ணா தமிழை வளர்த்தார். பிரச்சனை வரும்பொழுது[illegible] தமிழை ஒதுக்கினார் என்பதே உண்மை. (அதைத்து[illegible] என்கிற மனிதர்) - எழில்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# கெட்ட வார்த்தைகள்

படிக்காத பண்பில்லாத மனிதர்களிடம் மட்டுமன்றி பழுத்த நாகரிகமான மனிதர்களிடமும் ரொம்ப சரளமாக பேச்சில் தமிழ் ஆபாச வார்த்தைகள் துர்நாற்றமெடுக்கின்றன; ஒருவரைத் திட்டுவதற்காக அல்ல – சும்மா பேசும் போதே, ஏன் புகழும்போது கூட சிலர் இந்த அமங்கல வார்த்தைகளைப் பேசுவதைக் கௌரவமாக நினைக்கிறார்கள். அது பழகிப் போய் அது இல்லாமல் சிலரால் பேசவே முடியாது.

பெரும்பாலும் முறைகேடான உடலுறவைச் சித்தரிக்கும் இந்த வார்த்தைகளைத் தொழிலாளர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், வியாபாரிகள், மாணவர்கள் ஏன் சின்னஞ் சிறுவர்கள் கூட சர்வசாதாரணமாகப் பயன்படுத்துவதைத் தமிழ் நாட்டில்தான் பார்க்க முடிகிறது.

பெண்களை உயர்வு படுத்திய தமிழ்ப்பண்பாட்டில் ஊறியவர்கள் எப்படி பெண்களைக் காம விகாரமாக்கி அருவருப்பூட்டும் சொற்களைப் பேச்சு வழக்காக்கி வைத்திருக்கிறார்கள். நம் இனத்தையும், பண்பாட்டையும் பெருமையுடன் தம்பட்டம் அடித்துக் கொள்ள நாம் வெட்கப்பட வேண்டாமா?

இப்படியொரு வக்கிரமான வார்த்தைப் பிரயோகம் நம் கலாச்சாரத்தில் எப்படி நுழைந்தது? ஒருவரைத் திட்ட, எத்தனையோ மிருகங்களின் பெயர்களும், அஃறிணைப் பொருள்களும் இருக்க, முறைகெட்ட உடலுறவுச் சொற்களைப் பயன்படுத்துவது என்பது நம்மைப் பாலியல் நோயாளிகளாகவே காட்டும். ஒருசமயம் நம் சமூகத்தைப் பெருமளவில் இந்த நோய் பற்றியிருக்குமாயின், இதற்கான காரணங்களை ஆராய வேண்டியது அவசரம்; அவசியம்.

— உலகப்பன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# நடிகர் சுமனை மணக்க ரசிகைகள் ஆர்வம்!



சினிமா நடிகர் சுமன் ப்ளூ பிலிம் விவகாரத்தில் குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைதானவர். கற்பழிப்பு, பெண்களை மிரட்டிப் பணம் பறித்தல், ப்ளூ பிலிம் எடுத்தது போன்ற கீழ்த்தரமான குற்றங்கள் செய்ததாக சிறையில் அடைபட்டு, இப்போது ஜாமீனில் வந்திருக்கிறார்.

தமிழ், தெலுங்கு படங்களில் உன்னதமான வேடங்கள் போட்டு நடித்து வந்ததன் தாக்கம் எப்படிப் பாய்ந்திருக்கிறது பாருங்கள்:

தற்போது மதுரையில் இருக்கும் சுமன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறுகிறார்:-

“சிறையில் இருந்து விடுதலையானது முதல் எனக்கு ரசிகர்களிடமிருந்து ஏராளமான கடிதங்கள் வந்து குவிகின்றன. ரசிகைகளிடமிருந்துதான் எனக்கு அதிகமாகக் கடிதங்கள் வருகின்றன.

ஒரு நாளைக்கு சுமார் 100 ரசிகைகள் எனக்குக் கடிதம் எழுதுகிறார்கள். சிலர் ‘உங்களைத் திருமணம் செய்துகொள்ளத் தயாராக இருக்கிறேன். நீங்கள் சம்மதித்தால் உங்களை மாலையிடத் தயாராக இருக்கிறேன்’ என்று எழுதி குங்குமத்தில் ரத்தக் கையெழுத்துப் போட்டுக் கடிதத்தைச் சிலர் எழுதி அனுப்புகிறார்கள்.”

இவர்கள் எழுதும் கடிதங்களுக்குப் பதில் எழுதுவதுதான் சுமனுக்கு இப்போது வேலையாம். →

FREE E- BOOKS , www.thamizham.net.,

கலாச்சாரத்தின் தூண்களாகவும், நாட்டின் கண்களாகவும் வர்ணிக்கப்படுகிற நம் பெண்கள் - ஒருவர் இருவர் அல்ல நூற்றுக்கணக்கானோர் சினிமா போதையால் எவ்வளவு தூரம் சோரம் போயிருக்கிறார்கள் என்பதற்கு இதுவும் உதாரணம்.

ஆக்கப்பணி கருதி சினிமாவைக் கண்டுபிடித்த எடிசன் இப்படியொரு கலாச்சார சீரழிவிற்கு இது வழிவகுப்பதை இன்றிருந்து பார்த்தால் ரத்தக்கண்ணீர் வடிப்பார். – எழில்

# சில்லறைப் பஞ்சத்தால் லாபம்

எந்தத் தட்டுப்பாடு வந்தாலும் சிலர் கொள்ளை லாபம் அடிப்பதற்கு வழி கிடைத்து விடுகிறது. அரிசி, சர்க்கரை, மண்ணெண்ணெய் பஞ்சம் வந்ததால் சிலர் வேக வேகமாக கறுப்புப் பணக்காரர்கள் ஆனார்கள்.

இப்போது சில்லறைப் பஞ்சத்தால், ஒரு கூட்டம் நல்ல சில்லறை சம்பாதித்து வருகிறது. ரிசர்வ் வங்கியில் வேலை செய்வோருடன் கூட்டு சேர்ந்து புதிய ரூபாய் நோட்டுகளை, சிறப்பாக ஒரு ரூபாய் நோட்டுகளை சில்லறையாகப் பெற்று 10% கமிஷனுக்கு சில்லறைப் பஞ்சத்தில் தவிக்கும் இடங்களில் விற்கிறார்கள். அதாவது 100 ஒத்த ரூபாய் தந்தால் ரூ 10 கமிஷன். வங்கிகளே ஒரு வருடத்திற்கே சேமிப்புக் கணக்கில் 5% தான் வட்டி தருகின்றன.

நகரப் பேருந்துகளில் கண்டக்டர்கள் தங்கள் பையில் சில்லறை குலுங்கினாலும், தராமல் "சில்லறையாக எடு" என்று பயணிகளை மிரட்டுகிறார்கள். சில்லறைக் காசுகளை நல்ல கமிஷனுக்கு இவர்கள் சில வியாபாரிகளிடம் தான் மாற்றுவதாகக் கேள்வி.

– சுந்தராண்ட தேவர்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# லஞ்ச அதிகாரியைப் பிடித்து...

உங்கள் பகுதியில் அரசு அதிகாரி லஞ்சம் வாங்கும்போது கையும் களவுமாகப் பிடித்து மேல் நடவடிக்கை எடுக்க அரசிடம் மனு கொடுத்ததுண்டா? பயனில்லையா? அவை, குப்பைக் கூடையில் உறங்கச் சென்றனவா? சோர்ந்து, நொந்து போகாதீர்கள்.

ஒரிசாவின் புவனேஸ்வரில் ஒரு புதிய அணைக்கட்டுத் திட்டத்திற்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்யப்போகிறோம் என்று விவசாயிகளை மிரட்டி லட்சக்கணக்கில் லஞ்சம் வாங்கி ஆர்ஜித அதிகாரி ஏப்பம் விட்டார். ஆதாரப்பூர்வமாக அரசு இயந்திரத்திற்கு அனுப்பப்பட்ட குற்றச்சாட்டுகள் குப்பைக் கூடையில். வீறு கொண்ட இரு பத்திரிகையாளர்கள் சுதீர்குமாரும், லலித்மோகனும் "பிரகதிவாதி" என்ற ஒரியா மொழி நாளேட்டில் அதிகாரியின் லஞ்ச ஊழலை அம்பலமாக்கினர்.

விழிப்புணர்வூட்டப்பட்ட அப்பகுதி விவசாயிகளும், மாணவர்களும் அந்த அதிகாரியைப் பிடித்து, கரும்புள்ளி, செம்புள்ளி குத்தி நகரின் வீதிகளில் ஊர்வலமாக இழுத்துச் சென்றனர். அரசுக்குத் திடீரென்று சொரணை ஏற்பட்டு அதிகாரியும், பியூனும் வேலை நீக்கம் செய்யப்பட்டனர். பின் அதிகாரி கைது செய்யப்பட்டார். கையில் விலங்கிடப்பட்டு அதிகாரி சிறை சென்ற கண்கொள்ளாக் காட்சியைப் பத்திரிகையாளர் படம் பிடித்தபோது 'காமிரா' பிடுங்கப்பட்டது. லஞ்சப்பணத்தில் மாமூல் பெற்றது அம்பலமாகி விட்டதே என்று ஆத்திரமடைந்த அமைச்சர்கள் பத்திரிகையாளர்களை அதிகார, ஆள் பலத்தைப் பிரயோகித்து உள்ளே தள்ளியுள்ளனர். இதன் பிறகு நிலைமை இன்னும் சூடுபிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

– கார்த்திக்

FREE E- BOOKS , www.thamizham.net.,

## வருமானவரி அதிகாரிகள் வரி ஏய்ப்பு

வேலிகள் தானே நம் நாட்டில் அதிகமாகப் பயிரை மேய்கின்றன. சமீபத்தில் கஸ்டம்ஸ் அதிகாரிகள் வீட்டில் தான் நிறைய கடத்தல் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. அதே மாதிரி அண்மையில் மத்திய புலனாய்வுத் துறையினர் (சி.பி.ஐ.) வருமான வரி அதிகாரிகள் வீடுகளில் திடீர் சோதனை நிகழ்த்தச் சென்றபோது ஒரு வரி ஏய்ப்பு வருமான அதிகாரி, "கொஞ்சம் காத்திருங்கள். நான் யோகாசனம் செய்கிறேன். நான் முடித்த பிறகு வாருங்கள்." என்றாராம். இன்னொரு அதிகாரி வீட்டிற்குச் சென்றபோது அங்கே தலைமைக் காவல்துறை அதிகாரி (ஐ.ஜி.பி.) வரவேற்பு அறையில் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்தாராம். இப்படியெல்லாம் தர்ம சங்கடங்களைத் தந்திரமாகப் பிரயோகித்த போதிலும் சி.பி.ஐ. மயங்காமல் உள்ளே நுழைந்து சலித்து எடுத்து விட்டது. வித விதமாக திடுக்கிடும் தகவல்கள் கிடைத்தனவாம். ஒரு முக்கிய அதிகாரி தலைநகரின் பரபரப்பான பகுதியில் தனது 6-வயது மகனை முதலாளியாகக் காட்டி ஓர் அங்காடி நடத்துகிறார். ஒரு சொந்த பங்களா இருக்க, அதை பினாமியாக்கி, சகல சௌகர்யங்களுடன் அரசு பங்களாவை மலிவாக அனுபவிக்கிறார்.

— தி டெலி கிராப்


கவிஞர் ஈரோடு **தமிழன்பனின்**

புதிய புரட்சிப் படைப்புகள்

**சூரியப் பிறைகள்**
**நிலா வரும் நேரம்** —— நர்மதா பதிப்பகம், சென்னை-17.

**தீவுகள் கரையேறுகின்றன**
**திரும்பி வந்த தேர்வலம்** —— பூம்புகார் பிரசுரம், சென்னை-108.


**ஊமை வெயில்** —— அன்னம் - சிவகங்கை


FREE E- BOOKS , www.thamizham.net.,

# பாலகுமாரன் பேட்டி

**இல்லற வாழ்வின் மென்மையான உணர்வுகளை மட்டுமே நீங்கள் எழுதுகிறீர்கள்... வாழ்க்கையில் வேறு பிரச்சனைகளே இல்லையா?**

இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் எல்லாப் பிரச்சனைகளுக்கும் மூலக் காரணம் "செக்ஸ்"தான். பாரதியார் சொல்வார்: "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி" என்று! நம்மில் இன்று எத்தனை பெற்றோர்கள் சந்தோஷமாய் இருக்கிறார்கள்? கணவன்- மனைவி சந்தோஷமாயும், நல்ல பண்புள்ளவர்களாயும் இருந்தால் தான், அவர்கள் வாரிசுகளும் அப்படியே வளருவார்கள். ஆகவே எல்லாப்பிரச்சனைகளுக்கும் அடிப்படைக் காரணமான செக்ஸைப் பற்றி மட்டுமே நான் எழுதுகிறேன். நான் இதை ஒரு மரியாதைக் குரிய குணமாகக் கருதுகிறேன்.



**திரைப்படத் துறையில் உங்களது இலக்கு என்ன?**

டைரக்டராக வேண்டும். பொருளாதார ரீதியில் என்னை நான் உயர்த்திக் கொள்ள வேண்டும்.

**சமீபகாலமாக (பாலசந்தரிடம் அஸிஸ்டெண்டாக சேர்ந்த பிறகு) உங்களது கதைகளிலும், பேட்டிகளிலும் சம்பந்தா சம்பந்தமில்லாமல் பாலசந்திர, கமலஹாசன் துதி பாடுகிறீர்களே... சினி-ஃபீல்டில் வளர்வதற்கான யுக்தியோ இது...?**

திரைப்படத்துறையில் சுய திறமையின்றி, எவன் முதுகையும் எவனும் சொறிந்து விட முடியாது. →


FREE E- BOOKS , www.thamizham.net.,

எனக்கு நன்கு அறிமுகமானவர்களைப் பற்றி நான் எழுதுகிறேன். பாலசந்தர், கமலஹாசன் நண்பர்கள். ஆகவே நான் இவர்களைப் பற்றி எழுதுகிறேன். ஏன் என் மனைவியைப்பற்றிக் கூடத்தான் எழுதுகிறேன். அதற்காக நான் என் மனைவியைத் "துதி" பாடுகிறேன் என்றா அர்த்தம் கொள்வது?

தங்கள் "இரும்புக்குதிரைகள்" நாவலுக்கு எம்.ஏ.஁ஸி அறக்கட்டளை "பரிசு" வழங்கியது குறித்து---?

நான். தொண்டுக்கிழமாகி, எழுத முடியாமல் போன பிறகு, வழங்காமல், இளமையாய் இருக்கும் போதே பரிசு வழங்கி உற்சாகப்படுத்தியதற்காக சந்தோஷப்படுகிறேன். இருப்பினும் எனது படைப்புகளைப்பாராட்டி வரும் வாசகர் கடிதங்களைவிடப் பெரிய பரிசு எனக்கு வேறெதுவும் இல்லை.

பேட்டி:




• தலைக்கவசம் அணிய சட்டம் வந்து பல உயிர்ச்சேதங்களைத் தவிர்க்கும் என்று நிம்மதி அடைய முடியவில்லை. இப்படிப் பொறுப்பில்லா மனிதர்கள் புதுத் தலைவலிகள் தந்தால், எந்த சட்டம் தான் என்ன செய்யும்?

வேல் டைப் ஃபௌண்ட்ரி

● புதிய வகை உவண்ண அச்செழுத்துக்கள்
● எல்லா மொழி அச்செழுத்துக்கள்
● போஸ்டர் எழுத்துக்கள்
● எல்லா வித அச்சக உபகரணங்கள்

38, கட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை-7. பேசி: 664293

FREE E- BOOKS , www.thamizham.net.,

மத்திய அரசு அலுவலகங்களில் ஹிந்தி திட்டமிட்டுத் திணிக்கப் படுகிறது. ஹிந்தி படிக்காதவர்கள் அடுத்து வரும் பணி உயர்வுகளை பெற இயலாது என்ற நிலையினை நெருங்கிக் கொண்டிருக்கின்றனர்.

தொலைக்காட்சி ஹிந்தி பிரச்சார மேடையாகி விட்டது. உயர் மட்டத்துப் பிள்ளைகள் நிறையப் பணம் செலவு செய்து ஹிந்தி படிக்கத் துவங்கி விட்டனர். ஹிந்தித் திணிப்பை வாய் கிழியக் கண்டிப்பவர்களின் பிள்ளைகள் இரகசியமாக ஹிந்தி பயில்கின்றனர். லயன்ஸ் கிளப் போன்ற பொதுமக்கள் தொடர்பு நிறுவனங்கள் அடுத்த தலைமுறைப் பிள்ளைகள் ஹிந்தி பயில்வதை மறைமுகமாக ஊக்குவிக்கின்றன. தமிழ்நாடு தவிர இதர மாநிலங்கள் மும்மொழித் திட்டத்தினை முழுமனதுடன் ஏற்றுச் செயல்படுகின்றன.

## இந்தி திணிப்பின் மறு பக்கம்

தமிழகத்தில் ஹிந்தித் திரைப்படங்கள் தமிழ்த் திரைப்படங்களை விட அதிக வசூலைக் குவிக்கின்றன. தமிழ் நடிகர்கள் ஹிந்திப் படங்களில் நடித்து வெற்றி பெறுவது புகழப்படுகிறது. இந்நிலையில் கீழ்த் தட்டு மற்றும் நடுத்தர மக்களில் ஒரு சாரார் மட்டுமே கழகங்களின் பிரச்சார அடிப்படையில் ஹிந்தி எதிர்ப்பில் ஆர்வம் காட்டுகின்றனர். மத்திய அரசு வேலை வாய்ப்புகள் ஹிந்தி தெரிந்தவர்களுக்கு உடனடியாகக் கிடைத்து விடுகிறது என்ற நிலையில் இந்த எதிர்ப்புணர்வும் மங்கி வருகிறது.

ஆதலின் ஹிந்தி எதிர்ப்பு என்பது பிழைக்கத் தெரியாதவர்களின் கேலிக்குரிய செயலாகி விடுமோ என்கிற ஐயம் எழுந்துள்ளது.

— 'வெங்கட் - மோகன்'

FREE E- BOOKS , www.thamizham.net.,

சமூகப்பார்வையுடன், துப்பறிந்து செய்தி சேகரிக்கும் பத்திரிகைகள் இன்று வரவேற்பு பெறத் தொடங்கியுள்ளன. இத்தகையத் துப்பறிவு பத்திரிகை இயலை (இன்வெஸ்டிகேடிவ் ஜெர்னலிசம்) தமிழ்ப் பத்திரிகை உலகிற்கு முதலில் அறிமுகப்படுத்திய புரட்சியாளர் பாரதியார் தான்.

அவரது வாய்மொழியாகவே இப்படி அறிவிப்புகள் அவர் இதழில் இடம் பெற்றுள்ளன:-

"தமிழ் ஜில்லாக்களில் உள்ள ஏதானுமோர் சர்வ ஜன ரஞ்சகமான விஷயத்தைப் பற்றிச் செய்தியனுப்புவோர்க்குத் தக்க சன்மானம் தரப்பெறும்."

"தமிழ் ஜில்லாக்களில் உத்தியோகஸ்தர்களேனும், பிறர்களேனும் ஜனங்களை அக்கிரமமாகவும், உதாஸினமாகவும் நடத்தும் பட்சத்தில் அந்த இடங்களில் ஜனங்களுக்கு நீதிகிடைக்கும் பொருட்டு நம்மால் இயன்ற மட்டும் முயற்சி புரியக் காத்திருக்கிறோம்." அநீதிகள், ஊழல்கள் பற்றித் தனக்குத் தகவல் கொடுத்தவர்களின் பெயர்கள் எச்சமயத்திலும் வெளியிடப்படமாட்டா என்றும் உறுதிமொழி கூறி பத்திரிகா தர்மத்தை நிலைநாட்டினார்.

பாரதியாரின் இந்தியா பத்திரிகை சிவப்புத்தாளில் அச்சிடப் பெற்று வெளியிடப் பட்டது.

– சி.வி. மோகன்.

அவசியம் படிக்க வேண்டிய அரிய நூல்
புரட்சி எழுத்தாளர் திரு. என். ஆர். தாசனின்
சிறு பொறி
பதினேழு சிறுகதைகளின் தொகுப்பு
நூல் வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
பத்மா பதிப்பகம்
53, N.G.O. காலனி, குரோம்பேட்டை, சென்னை - 600 044.

FREE E- BOOKS , www.thamizham.net.,

# வெளிவந்துவிட்டது

<u>பாரதியின் குயில்பாட்டு விளக்கம்</u> (10.00) - மின்னூர் சீனிவாசன் - மின்னூர் வெளியீடு, 22/7, தீர்த்தாரப்பன் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005.

ஓண <u>நினைவு மலர்</u> -1985 (மலையாளம்) - வெளியீடு:- சின்ன-கார யூத் கிளப், மூணார், இடுக்கி மாவட்டம், கேரளம். விலை:- குறிப்பிடவில்லை.

<u>தமிழில் இஸ்லாமிய மெய்ஞ்ஞான இலக்கியங்கள்</u> (15.00) தொகுப்பாசிரியர்:- மணவை முஸ்தபா - M/S மீரா ஃபௌண்டேஷன், AE 103, அண்ணா நகர், சென்னை - 600 040.

<u>கீன்பூசியஸும் திருவள்ளுவரும் கண்ட கல்வி</u> (12.00) - டாக்டர் கு.மோகனராசு, வள்ளுவர் கழகம், 69, வேங்கடரங்கம் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005.

<u>மனோவலிமை தரும் வெற்றிகள்</u> (9.00) - ஞானமூர்த்தி - அநுராகம், 10, ஜெஸ்மென் ரோடு, சென்னை - 600017.

<u>திருமணங்கள் வெறும் நிகழ்ச்சிகள் அல்ல</u> --- சிறுகதைத் தொகுப்பு (10.00) - ஏர்வாடி எஸ். ராதாகிருஷ்ணன் - M/S சுதா பதிப்பகம், 4, முந்து தெரு, சென்னை - 600 007.

<u>பூத்த வெள்ளி</u> - கவிதைகள் (4.00) - குருவிக்கரம்பை சண்முகம் - M/S பாண்டியன் பதிப்பகம், 17, 3வது தெரு இருக்குச்சாலை பிடாரி செனாய் நகர், சென்னை - 600 030.

<u>ஸ்கிரீன் பிரிண்டிங் தொழிலைக் கற்றுக்கொள்ளுங்கள்</u> (9.25) - மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு - மணிமேகலைப் பிரசுரம், த.பெ. 1447, 4, தணிகாசலம் ரோடு, சென்னை -17.

<u>இளமைச் சுவடுகள்</u> - வெளியீடு:- இ.கி.மா / இ.மா. அறுவகை ஆயர் இல்லம், த.பெ.14, திருச்சி -1. விலை:- குறிப்பிடவில்லை.

<u>கொலைகாரன் முகுந்தன் கூட்டாளி வாசுதேவ வசந்தன் எங்கே?</u> - இரண்டையும் எழுதியவர் சி.அ.மேபி முகவரி, விலை எதுவும் குறிப்பிடவில்லை

<u>சிறுபொறி</u> - சிறுகதைத் தொகுப்பு (15.00) - என். ஆர். தாசன் - M/S பத்மா பதிப்பகம், 53. N.G.O. காலனி, குரோம்பேட்டை, சென்னை - 600044.

<u>அரசியல் திட்டம்</u> - வெளியீடு:- பிரச்சார செய்திப் பிரிவு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி. விலை:- குறிக்கவில்லை

<u>மரணம்</u> - கவிதைகள் (4.00) - செழியன் - M/S சிவா பதிப்பகம், 18. சங்கரபுரம் 3வது தெரு, சென்னை - 600094

<u>வாழத் துடிப்பவர்கள்</u> - சிறுகதைத் தொகுப்பு (17.50) ம.ந. ராமசாமி - M/S நர்மதா பதிப்பகம், 10, சோமசுந்தரம் தெரு, சென்னை - 600 017.

<u>பாரதத்தில் உருகும் படைகள்</u> - கவிதைத் தொகுப்பு (5.90) - M/S பூம்புகார் பிரசுரம், 63 பிராட்வே, சென்னை 600108.

<u>பாரதி வரலாற்று நாடகம்</u> (6.25) - சிலோன் விஜயேந்திரன் - M/S அல்லயன்ஸ் கம்பெனி, த.பெ. 617, மயிலாப்பூர், சென்னை 600004.

<u>பற்றி எரிகிற பனித்திகள்</u> - கதைத் தொகுப்பு (6.00) - வலம்புரி ஜான் - M/S கலைதா பவன், 122, பெரியார் பாதை, சூளைமேடு, சென்னை - 600 094.

தமிழகமெங்கும் வீடுகள், வீட்டுமனைகள்
சகாய விலையில் வாங்க - விற்க
தொடர்பு கொள்க: எம். வெங்கட்,
24. திருவள்ளுவர் தெரு, இராமாபுரம்,
அம்பத்தூர், சென்னை - 600 053.
- வரி விளம்பரம்

FREE E- BOOKS , www.thamizham.net.,

# விமர்சனம் எதற்கு?



● ஊடுருவிச் செல்லும் செய்தித் தொடர்பு சாதனங்கள் இருந்தும் ஐக்கிய அமெரிக்காவில் உள்ள ஒரு சராசரி அமெரிக்கர், ராஜீவ் காந்தியை மகாத்மா காந்தியின் பேரன் என்றும், இந்திரா காந்தியை மகாத்மாவின் மகள் என்றுமே நம்புகிறார்கள் – சுப்ரமணிய சுவாமி



● வன்முறையை சத்யாகிரகத்தால் எப்படி நிறுத்துவது என்று எந்தத் தலைவராவது எனக்குச் சொன்னால் என் இடத்தை அவருக்கு நான் விட்டுக் கொடுக்கிறேன்.

– ஜெயவர்த்தனே



● இதுவரை இந்திய அரசியல் சட்டம் துப்பாக்கி மாதிரி, ஆனால் சுட முடியாத துப்பாக்கி.

– ஜஸ்டிஸ் பகவதி



● சோனியா காங்கிரஸ் தலைவராவார் என்ற பேச்சுக்கே இடமில்லை. அவர் கட்சியின் சாதாரண உறுப்பினர் கூட இல்லை. அவர் அரசியலிலேயே இல்லை.

– ராஜீவ் காந்தி.

● என் பாட்டனாரோடும், என் தாயாரோடும் மக்கள் எப்போதும் ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள் என்பதே எனக்குள்ள சங்கடம். அவர்கள் என்ன செய்திருப்பார்கள் என்று நான் பின்னோக்கிப் பார்ப்பதில்லை.

– ராஜீவ் காந்தி.



● என் கடந்த காலம் போலவே எதிர்காலமும் அமைந்தால் அடுத்த துணை ஜனாதிபதி நான்தான். (குமாரபாளையம் டேனிஷ் இந்தியா துவக்க விழாவில்).

– இரா. நெடுஞ்செழியன்.

FREE E- BOOKS , www.thamizham.net.,





ஆசிரியர்: கு. நாராயண பாரதி, வெளியிடுபவர்: கி. ராமச்சந்திரன். 1494. அண்ணா நகர், சென்னை- 600040. அச்சிடுவோர்: எஸ்.எம். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ், 137, Dr. நடேசன் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005.

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE  E- BOOKS , www.thamizham.net.,

கட்டுரை வரை இதழ் 1, நவ 1985 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-58

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)




# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E- BOOKS , www.thamizham.net.,